மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி வரவில்லை என்று நீங்கள் சொன்னால் (குறுக்கீடு) 9.35-க்குத்தான் என்னிடம் கொடுக்கப்பட்டது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 8.40-க்கே அனுப்பிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம்தான் கொடுத்தார்கள். (குறுக்கீடு) இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. (குறுக்கீடு) 9.35-க்கு என்னிடத்தில் சேர்ப்பிக்கப்பட்டது. (குறுக்கீடு) உங்களுக்கு வரவில்லை என்று நீங்கள் சொல்வதற்காக இப்போது நான் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே அனுப்பி, செயலாளரிடத்தில் சேர்ப்பிக்கும்படி சொல்லி, என்னுடைய உதவியாளரை அனுப்பி இருக்கிறேன். எத்தனை மணிக்குக் கொடுத்தார்கள் என்று அவரிடம் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரிடம் கொடுக்கவில்லை, என்னிடம் கொடுத்தார்கள். (குறுக்கீடு) செயலாளர் 8.30 மணியிலிருந்து இருக்கிறார், அவரிடம் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) அது பிரச்சினை இல்லை. செயலாளரிடம் கொடுக்கவில்லை. என்னிடம் 9.35-க்குக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) அவர் 8.30 மணியிலிருந்து அறையில்தான் இருக்கிறார். எனவே அதுவல்ல இப்போது பிரச்சினை. நான் அனுமதி அதற்கு மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) அதற்கு நான் அனுமதி மறுத்து இருக்கிறேன் என்பதை அவையிலேயே தெரிவிக்கிறேன். (குறுக்கீடு) அதுபற்றிய தகவல் உங்களுக்கு வரவில்லை என்று நீங்கள் சொன்னால் நான் இந்த அவையிலேயே அறிவிக்கிறேன். அதாவது நான் அதற்கு அனுமதி மறுத்து இருக்கிறேன் என்பதை அவையிலேயும் அறிவிக்கிறேன்.

2. அரசினர் சட்டமுன்வடிகள் (அறிமுகம் செய்தல்)

(அ) உரிமையியல் நீதிமன்றங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 டிசம்பர் 28] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.